# ருக்மி வதமும் மகாவிஷ்ணுவும்

சாந்திப்பிரியா



கிருஷ்ணரின் மனைவி ருக்மணியின் சகோதரன் ருக்மியின் கதை இது. முன்னொரு காலத்தில் விதர்பா நாட்டில் ( இன்றைய மத்தியப் பிரதேசம் ) போஜகஜா எனும் இடத்தில் இருந்த பீஷ்மகா என்ற மன்னனுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன. மகனுடைய பெயர் ருக்மி. கடைசி மகள் ருக்மணி என்பவள். அவளைத் தவிற மற்ற அனைவரும் பெண்கள். முன்னொரு பிறவியில் ஏற்பட்டிருந்த சாபத்தினால் மகாலஷ்மியே ருக்மணி என்ற பெயரில் அவருக்குப் பிறந்து இருந்தாள். ருக்மியும் பூர்வ ஜென்மத்தில் ஒரு அசுரன், சாபம் பெற்று ரும்மியாக இங்கு பிறந்திருந்தான். ருக்மிக்கு யாதவ குலத்தில் பிறந்திருந்தவர் கிருஷ்ணர் என்பதோ, மகாலஷ்மிதான் ருக்மணியாகப் பிறந்துள்ளனர் என்பதோ எதுவும் தெரியாது.

ருக்மணி கிருஷ்ணரை மனதாற விரும்பினாள். தனது சகோதரியை கிருஷ்ணருக்கு மணமுடிக்க அவனுடைய தந்தை விரும்பிய பொழுது அதை ருக்மீ எதிர்த்தான். ஆகவே உடனடியாக அவளுக்கு குண்டினபுரா என்ற இடத்தில் சுயம்வரம் நடத்த ஏற்பாடு செய்து விட்டான். அந்த சுயம்வரத்துக்கு கிருஷ்ணருக்கு விரோதியான ஜரசன்திரா என்ற மன்னனும் வந்திருந்தான். வந்திருந்த அனைத்து மன்னர்களும் கிருஷ்ணருக்கு விரோதிகள். ஆகவே அவர்கள் அந்த

சுயம்வரத்திற்கு நிச்சயமாக கிருஷ்ணர் வருவார் என எதிர் பார்த்தனர். அப்படி வந்தால் அவரை அவமானப்படுத்தும் விதமாக ஒருவரும் எழுந்து அவர் அமர இடம் கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்தனர். அப்படி செய்தால் அந்த அவமானத்தைத் தாங்காமல் கிருஷ்ணர் சுயம்வர மண்டபத்தை விட்டு வெளியேறி விடுவார் எனவும் எதிர் பார்த்தனர்.

சுயம்வரத்தில் இறுதியாக செட்டி நாட்டு மன்னன் சிசுபாலனுக்கு ருக்மணியை மணம் முடிக்க ருக்மி முடிவு செய்தான். சிசுபாலன் ஒரு அரக்க குலத்தவன். கிருஷ்ணரின் எதிரி. அந்த வைபவத்தில் அவனுடன் அவன் நண்பர்களான மன்னர்கள் ஜரசந்திரா, தன்தவாக்ரா மற்றும் பண்ட்ரகா போன்றவர்களும் வந்திருந்தனர். அவர்கள் அனைவரும் யாதவர்களை அழிக்க நினைத்தவர்கள். இதற்கிடையே அவர்களில் இருந்த கிருஷ்ணரை மனமார விரும்பிய ஒரு மன்னன் திருமண சேதியை கிருஷ்ணரிடம் கொண்டு சென்றான். அவளை எப்படியாவது காப்பாற்றி மணக்குமாறு கூறினான்.

சற்றும் தயங்கவில்லை கிருஷ்ணர். உடனே தன்னுடைய சகோதரன் பலராமனிடம் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு தன்னுடன் வருமாறு கூறிய பின் திருமணம் நடக்க இருந்த இடத்திற்குச் சென்றார். நான்கு வெள்ளை குதிரைகள் பூட்டிய தேரில் திருமணம் நடந்து கொண்டு இருந்த மண்டபத்தை அடைந்து ருக்மணியைத் தூக்கி வந்தார். அவரைத் துரத்திச் சென்ற சிசுபாலனுடைய சேனையினர் பலரும் உயிர் இழக்க சிசுபாலனும் ஒரு பெண்ணிற்காக தான் ஏன் உயிர் விட வேண்டும் என எண்ணியவனாக ஓடிவிட்டான். மற்ற மன்னர்களும் தோற்று ஓடினார் என்றாலும் ருக்மணியின் சகோதரன் ருக்மியோ கிருஷ்ணரை விடாமல் துரத்திச் சென்றான். அவனை கொல்ல நினைத்த கிருஷ்ணரிடம் தன் சகோதரனுக்காக உயிர் பிச்சைக் கேட்டாள் ருக்மணி. ஆகவே அவர் எய்த ஆயுதம் அவன் தலை மயிரையும், மீசையையும் வழித்து விட்டுச் சென்றது. ருக்மி உயிர் தப்பினான்.

ஆனால் அவனால் அந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆகவே கைலாயம் சென்று சிவபெருமானைத் துதித்து தவம் செய்தான். பல ஆண்டுகள் தவம் செய்ய அதனால் மனம் மகிழ்ந்த சிவபெருமான் அவன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி அவனுக்கு ஒரு ஆயுதத்தை அளித்தார். அதை அவன் மகாவிஷ்ணுவிற்கு எதிராகப் பயன்படுத்தினால் பலனின்றிப் போய்விடும் என்ற நிபந்தனையுடன் தந்தார். அவனும் தன் நாடான போஜகடாவிற்கு சென்று ஆட்சி செய்யத் துவங்கினான். சில நாட்களில் மீண்டும் கிருஷ்ணருடன் யுத்தம் செய்து தோற்றுப் போனான். அந்த யுத்தத்தில் தோற்றுப் போனது அவனுக்கு திருப்பு முனையாக அமைந்தது. இனி கிருஷ்ணருடன் சண்டையிடுவதை விடுத்து சமாதானமாகப் போய் விடலாம் என்று மனதை மாற்றிக் கொண்டான்.

அதை அறிந்த பாண்டவர்கள் அவனை மகாபாரத யுத்தத்தில் தமக்கு உதவ அழைத்தனர். யுத்தத்தில் அர்ஜுனன் சண்டை இட முடியாமல் போனால் மட்டுமே தன்னால் வந்து உதவ முடியும் எனக் கூறிவிட்டான். அதை அறிந்த அர்ஜுனன் அவனை கேலி செய்து அனுப்பி விட்டான். அதனால் மீண்டும் அவமானத்தினால் மனம் வருந்தியவன் தன்னுடைய உதவியை துரியோதனனுக்கு அளிக்க முடிவு செய்து அவனை அணுகிய பொழுது துரியோதனனும் அதை நிராகரித்து விட்டான். எந்த இடத்திலும் தனக்கு கௌரவம் இல்லை என்பதை அறிந்த ருக்மி தன் நாட்டிற்கு திரும்பி வந்து சோகத்தில் ஆழ்ந்து விட்டான்.

அந்த நேரத்தில் கலிங்க மன்னன் அவனிடம் சென்று பக்கத்து நாட்டில் இருந்த பாலபத்ரராமா என்ற மன்னனுடன் சூதாடி ஜெயித்து அவனுடைய நாட்டை பிடுங்கிக் கொள்ள வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்தான். பாலபத்ரராமா யார் ? மகா விஷ்ணுவே பாலபத்ரராமா என்ற உருவில் வாசுதேவருக்குப் பிறந்து இருந்தார். பூமியில் அசுரர்களினால் அக்கிரமம் பெருகி விட்டதினால் அவர்களை அழிக்க வேண்டும் என்று பூமாதேவி வேண்டியதின் விளைவாக அவர் அவதாரம் எடுத்து இருந்தார். பாலபத்ரராமாவுடன்

சூதாட்டம் துவங்கியது. முதலில் ருக்மி வென்றான். அடுத்தடுத்த ஆட்டத்தில் பாலபத்ரராமா வென்று விட இராஜ்யம் முழுவதையும் பறி கொடுக்க வேண்டிய நிலைக்கு ருக்மிக்கு வந்தது. அவனுடன் வந்திருந்த அனைத்து மன்னர்களும் ருக்மியுடன் சேர்ந்து கொண்டு பாலபத்ரராமா வெற்றி பெற்றதை ஏற்றுக் கொள்ளாமல் தகறாறு செய்யத் துவங்கி சண்டையிடத் துவங்க பாலபத்ரராமா எழுந்து வந்து ருக்மியின் தலையில் ஒரு இரும்புத் தடியால் தாக்க ருக்மி இறந்து விழுந்தான். மற்றவர்கள் தோற்று ஓடினர். அவன் பெற்றிருந்த சாபத்தின்படி மகாவிஷ்ணுவினால் அவன் மரணம் நிகழ்ந்தது. கிருஷ்ணரே விஷ்ணுவின் அவதாரம் என்பதையும், ருக்மணி அவருடைய மனைவியுமான மகாலஷ்மியின் அவதாரம் என்பதையும் புரிந்து கொண்டவன் அவர்களை தான் மரணம் அடையும் தருவாயில் வணங்கினான்.